12 NOV 2024 தி இந்து

# 723 பொருட்களுக்கு பிஎஸ்ஐ சான்றிதழ் கட்டாயம்

## ● இந்திய தரநிர்ணய அமைவன முன்னாள் இயக்குநர் தகவல்

● திருநெல்வேலி

723 பொருட்களுக்கு தரக்கட்டுப்பாடு (பிஐஎஸ்) சான்றிதழ் கட்டாயம் பெற வேண்டும் என மத்திய அரசு அறிவித்துள்ளது என இந்திய தரநிர்ணய அமைவன முன்னாள் இயக்குநர் தாமரை செல்வன் தெரிவித்தார்.

திருநெல்வேலி ஆட்சியர் அலுவலகத்தில் இந்திய தர நிர்ணய அமைவனம் பெங்களூரு கிளை சார்பில், பொருட்களின் தரம் மற்றும் தரச்சான்றிதழ் தொடர்பாக மாவட்ட அளவிலான அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடந்தது. பயிற்சிக்கு ஆட்சியர் கே.எம்.சரயு தலைமை வகித்தார். இந்திய தரநிர்ணய அமைவன முன்னாள் இயக்குநர் தாமரை செல்வன் பயிற்சி அளித்தார். பின்னர் அவர் கூறியதாவது:



திருநெல்வேலியில் பொருட்களின் தரம் மற்றும் தரச்சான்றிதழ் குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்பு நடந்தது. இதில், இந்திய தர நிர்ணய அமைவன முன்னாள் இயக்குநர் தாமரை செல்வன் பேசினார். உடன், ஆட்சியர் கே.எம்.சரயு உள்ளிட்டோர்.

அரசு அலுவலகங்களுக்கு இ-சந்தை மூலம் பொருட்கள் வாங்கும்போது, தரச்சான்றிதழ் மற்றும் தரக்கட்டுப்பாடு (பிஐஎஸ்) சான்றிதழ் உள்ளதா என்பதை பார்த்து வாங்க வேண்டும். தற்போது 723 பொருட்களுக்குத் தரக்கட்டுப்பாடு (பிஐஎஸ்) சான்றிதழ் கட்டாயம் தேவை என மத்திய அரசு அறிவித்துள்ளது.

சமையல் எரிவாயு சிலிண்டர், தலைக்கவசம், சிமென்ட், குக்கர், விளையாட்டுப் பொம்மைகள், காலணிகள், வாகனங்களின் டயர்கள், பாட்டில் குடிநீர் உள்ளிட்ட பொருட்களுக்கு கட்டாயம் தரக்கட்டுப்பாடு (பிஐஎஸ்) சான்றிதழ் பெற வேண்டும் என அறிவித்துள்ளது. தரம் குறைபாடு உள்ள பொருட்கள் பற்றி புகார்களை பிஐஎஸ் கேர் செயலின் உதவியோடு எளிதில் பதிவு செய்யலாம். இவ்வாறு அவர் கூறினார்.

பயிற்சி வகுப்பில், இந்திய தரநிர்ணய அமைவனத்தின் பணிகள், பொருட்களின் தரத்தை எப்படி நிர்ணயம் செய்து தரக்குறி மற்றும் பிஐஎஸ் சான்றிதழ் வழங்கப்படுகிறது, தங்க நகைகளுக்கான ஹால்மார்க்கிங் தரச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் தங்கத்தின் தூய்மை தன்மையை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டுத் தயாரிப்புகளுக்கான தரச்சான்றிதழ் சேவை வழங்குதல், பிஐஎஸ் கேர் செயலின் பயன்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) [illegible] கலந்து கொண்டனர்.

12 NOV 2024 மாலைக்கதிர்



கிருஷ்ணகிரியில் பொருட்களின் தரம் மற்றும் தரச்சான்றிதழ் குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்கள் அறிந்து கொள்வது தொடர்பான பயிற்சி நடந்தது.

# பொருட்களின் தரம், தரச்சான்றிதழ் மாவட்ட அலுவலர்களுக்கு பயிற்சி

**கிருஷ்ணகிரி, நவ. 12–**

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், இந்திய தரநிர்ணய அமைவனம், பெங்களூர் கிளை நடத்தும் பொருட்களின் தரம் மற்றும் தரச்சான்றிதழ் குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்கள் அறிந்து கொள்வது தொடர்பான பயிற்சி நடந்தது. கலெக்டர் சரயு தலைமை வகித்தார்.

இதில், இந்திய தரநிர்ணய அமைவனம் முன்னாள் இயக்குனர் தாமரை செல்வன் பங்கேற்று பயிற்சி அளித்தார். அப்போது, இந்திய தர நிர்ணயத்தின்போது பொருட்களுக்கான தரத்தை முறைப்படுத்துதல், பொருட்களுக்கான ஐஎஸ்ஐ தரச்சான்றிதழ் வழங்குதல், ஐஎஸ்ஓ தரச்சான்றிதழ் வழங்குதல், ஆய்வகத்தில் பொருட்களுக்கான தரத்தை உறுதி செய்தல்.

தங்க நகைகளுக்கான ஹால்மார்க் தரச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் தங்கத்தின் தூய்மை தன்மையை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டு தயாரிப்புகளுக்கான தரச்சான்றிதழ் சேவை வழங்குதல், மின்னணு மற்றும் தொழில்நுட்ப சாதனங்களுக்கான பிஐஎஸ் தரச்சான்றிதழ்களுடன் கூடிய கட்டாயம் பதிவு சான்றிதழ் மற்றும் பிஐஎஸ் கேர் செயலியின் பயன்பாடு குறித்து விளக்கம் அளித்தார்.

மேலும், மாவட்ட அளவிலான பொருட்கள் வாங்கும் போது அரசு இ சந்தையில் ஐஎஸ்ஐ தரச்சான்றிதழ் மற்றும் கட்டாய சான்றிதழ் ஆகியவை உள்ளதா என்பதை பார்த்து பொருட்கள் வாங்க வேண்டும். தற்போது 723 பொருட்களுக்கு அரசு தரப்பில் பிஐஎஸ் கட்டாய தரச்சான்றிதழ் தேவை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர், தலைக்கவசம், சிமெண்ட், குக்கர், விளையாட்டு பொம்மைகள், காலணிகள், வாகனங்களின் டயர்கள், பால் பவுடர் போன்ற பொருட்களுக்கு கட்டாய தரச்சான்றிதழ் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரக்குறைபாடு உள்ள பொருட்கள் பற்றிய புகார்களை பிஐஎஸ் கேர் செயலியின் உதவியோடு எளிதில் பதிவு செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) புஷ்பா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

12 NOV 2024 மாலை மலர்

### பொருட்களின் தரம், தரச்சான்றிதழ் குறித்து

# மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கான பயிற்சி

கிருஷ்ணகிரி, நவ.12—

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், இந்திய தரநிர்ணய அமைவனம், பெங்களூர் கிளை நடத்தும் பொருட்களின் தரம் மற்றும் தரச்சான்றிதழ் குறித்து மாவட்ட அளவிலான அலுவலர்கள் அறிந்து கொள்வது தொடர்பான பயிற்சி நடந்தது. இந்த பயிற்சிக்கு மாவட்ட கலெக்டர் சரயு தலைமை தாங்கினார். இதில், இந்திய தரநிர்ணய அமைவனம் முன்னாள் இயக்குநர் தாமரை செல்வன் பங்கேற்று பயிற்சி அளித்தார்.

**கட்டாய தரச்சான்றிதழ்**

அப்போது, இந்திய தர நிர்ணய தற்போது பொருட்களுக்கான தரத்தை முறைப்படுத்துதல், பொருட்களுக்கான ஐ.எஸ்.ஐ. தரச்சான்றிதழ் வழங்குதல், ஐ.எஸ்.ஓ. தரச்சான்றிதழ் வழங்குதல், ஆய்வகத்தில் பொருட்களுக்ககக தரத்தை உறுதி செய்தல், தங்க நகைகளுக்கான ஹால்மார்க் தரச்சான்றிதழ் வழங்குதல் மற்றும் தங்கத்தின் தூய்மை தன்மையை உறுதிப்படுத்துதல், வெளிநாட்டு தயாரிப்புகளுக்கான தரச்சான்றிதழ் சேவை வழங்குதல், மின்னணு மற்றும் தொழில்நுட்ப சாதனங்களுக்கான பி.ஐ.எஸ். தரச்சான்றி தழ்களுடன் கூடிய கட்டா யம் பதிவு சான்றிதழ் மற்றும் பி.ஐ.எஸ். கேர் செயலியின் பயன்பாடு குறித்து விளக்கம் அளித்தார்.

மேலும், மாவட்ட அளவிலான பொருட்கள் வாங்கும் போது அரசு இ—சந்தையில் ஐ.எஸ்.ஐ. தரச்சான்றிதழ் மற்றும் கட்டாய சான்றிதழ் ஆகியவை உள்ளதா என்பதை பார்த்து பொருட்கள் வாங்க வேண்டும். தற்போது 723 பொருட்களுக்கு அரசு தரப்பில் பி.ஐ.எஸ். கட்டாய தரச் சான்றிதழ் தேவை என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

வீட்டு உபயோக கியாஸ் சிலிண்டர், ஹெல்மெட், சிமெண்ட், குக்கர், விளையாட்டு பொம்மைகள், காலணிகள், வாகனங்களின் டயர்கள், பால் பவுடர் போன்ற பொருட்களுக்கு கட்டாய தரச்சான்றிதழ் அறிவிக்கப்பட்டு உள்ளது. தரக்குறைபாடு உள்ள பொருட்கள் பற்றிய புகார்களை பிஐஎஸ் கேர் செயலியின் உதவியோடு எளிதில் பதிவு செய்வது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த பயிற்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) புஷ்பா மற்றும் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.